# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233


கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஆவணி 1983 ★ இதழ் - 92


## பனைவளத்துக்குப் பெருவாய்ப்பு

**தமிழ்நாட்டுப் பனை நிபுணர் திரு. சம்பந்தன் எங்கள் மத்தியில் வந்திருந்து வடமாநிலமெங்கும் சுற்றிப் பார்த்து, பனை வளத்துக்குப் புதிய திருப்பந் தந்துள்ளார்.**

பனம் பொருள்கள் பெருவாரியாக ஏற்றுமதியாகக் கூடிய வாய்ப்பும் வசதியும் வரப்போகின்றன. பனைவளத்தை நம்பி, இத்தனை பனைக்குச் சொந்தக்காரன், இத்தனை பனை சீதனம் என்றெல்லாம் நம்மவர் பெருமைப்படப்போகிறோம். தயவுசெய்து பனைகளைக் கண்டபடி தறியாதீர்கள்.

சம்பந்தன் அவர்கள் உடனடியாகத் தீவுப்பகுதி மக்களுக்கும் மன்னார்ப்பகுதி மக்களுக்கும் வழிகாட்டியுள்ளார். பனம் பிரயோசனங்களை வாரிக்கொண்டு போக வெளிநாட்டுப் பணம் வரப்போகிறது. வெளிநாட்டார் முன்னம் பொன்னோடு வந்து பொருளொடு போனவர்கள். அந்தப் பொற்காலம் மலரப்போகிறது. இந்த விஜயதசமி நாள்களில் ஆயிரமாயிரமாகப் பனம் விதைகளை நட்டுப் பனையை வளர்ப்போமாக. இளம் வடலி ஓலை தேவையாகும். ஏழு எட்டு ஆண்டுப் பனையின் கங்கு மட்டைத் தும்புக்கு உலகில் நல்ல மதிப்பு. இதற்கு மேல் சொல்ல என்ன இருக்கிறது?



**பனையை வளர்ப்போம் பயனைப் பெறுவோம்**

★ மனக்கோணல்களை நீக்குபவனே சான்றோனாகிறான் ★

உ
சிவமயம்






## திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்

திருப்பழனம் — திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

வெள்ள மொருசடைமே லேற்ருர் தாமே
மேலார்கண் மேலார்கண் மேலார் தாமே
கள்ளங் கடிந்தென்னை யாண்டார் தாமே
கருத்துடைய பூதப் படையார் தாமே
உள்ளத் துவகை தருவார் தாமே
யுறுநோய் சிறுபிணிகள் தீர்ப்பார் தாமே
பள்ளப் பரவைநஞ் சுண்டார் தாமே
பழன நகரெம் பிரானுர் தாமே.

ஆகாயகங்கை பெருவெள்ளப் பெருக்காகக் கரை புரண்டு வந்தபோது அதனைச் சிறு திவலையாக்கித் தம் திருச்சடைமேல் தங்கவைத்தவர், மேலாய தேவர்களுக்கு மேலாயவரான நான்முகனுக்கும் திருமாலுக்கும் மேலாய பிரானுனவர், சமணர் சார்பில் நின்ற கள்ளத்தன்மையை நீக்கி அடியேனைக் காத்தாட் கொண்டருளியவர், ஞானம் பெற்றவர்களாய சிவபூதங்களைப் படைகளாகவுடைய பரமனுர், உள்ளத்து வாட்டமெல்லாம் நீக்கி மகிழ்ச்சி தந்தருளும் மணாளனுர், உடலுக்கு உறுகின்றனவாய பல வகை நோய்களையும், உயிருக்குண்டாகின்ற பெரு நோயாய பிறவிப் பிணியையும் நீக்கியருளுபவரும், பரந்து பட்ட பள்ளமுள்ளதாய கடலில் வந்த ஆலகாலவிடத்தை அமுது செய்தருளியுள்ள எங்கள் தலைவன் தாமே.

## வஜனம்ருதம்

சுவாமி கெங்காதரானந்தா

காலமெல்லாம் பாலூட்டி வளர்த்த பாம்பும் ஒரு நாள் ஊட்டிய கரத்தில் கொத்தும். அவ்விதமே செய் நன்றி மறந்த மனிதனும்.

நல்லவர்களின் மனம் புண்படும் வகையில் நீ நடந்தால் பிரம்மசாபம் உன்னைவிட்டு நீங்காது.




## புகழ்

இல்லறத்தன்மைகளால் ஒருவருக்கு உண்டாகி என்றும் நிலைத்து நிற்கும் பெருமை.

ஒன்ரு உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்ருது நிற்பதொன்று இல்.

உலகத்தில் தனக்கு இணையில்லாமல் ஓங்கிய புகழைத் தவிர அழியாது நிலைப்பது வேறு ஒன்றும் இல்லை.

**GLORY**

There is nothing like the incomparable fame to stand as the only imperishable thing in the world.

## 1983 ஆகஸ்ட் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | திங்கள் | — | பகல் 2-18 அட்டமி எச்சாட்டி அம்மன் கொடி |
| 2 | செவ்வாய் | — | அட்டமி - நவமி |
| 3 | புதன் | | நவமி பகல் 1-14 வரை |
| 5 | வெள்ளி | — | ஏகாதசி விரதம் |
| 6 | சனி | — | சனிப் பிரதோஷம் |
| 7 | ஞாயிறு | — | மாவிட்டபுரம் தேர் |
| 8 | திங்கள் | — | ஆடியமாவாசை - சந்நிதி கொடி |
| 10 | புதன் | — | ஆடிப்பூரம் |
| 11 | வியாழன் | — | துர்க்கையம்மன் கொடி |
| 13 | சனி | — | நல்லூர் கொடி |
| 14 | ஞாயிறு | — | சுந்தரமூர்த்திநாயனுர் பூசை |
| 15 | திங்கள் | — | பகல் 12-20 அட்டமி |
| 16 | செவ்வாய் | — | அட்டமி நவமி |
| 17 | புதன் | — | நவமி பகல் 12-00 வரை ஆவணி மாதப் பிறப்பு |
| 20 | சனி | — | சனிப்பிரதோஷம் |
| 23 | செவ்வாய் | — | பூரணை |
| 26 | வெள்ளி | — | திரு. வி. க. நாருண்டு |
| 30 | செவ்வாய் | — | கார்த்திகை விரதம் இரவு 1-16ன் மேல் அட்டமி |
| 31 | புதன் | — | அட்டமி நவமி கிருஷ்ண ஜயந்தி |

## சண்டிலிப்பாய்

இந்துசமயவிருத்திச் சங்கத்தார் தலைவர் செல்வரத்தினம் அவர்கள் தலைமையில் மாணிக்கவாசகர் விழாக் கொண்டாடியபோது, பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டியில் பரிசுபெற்றவர்களுக்கான பரிசுகளை மில்க்வைற் தொழிலதிபர் தாமே நேரில் கொடுத்துப் பாராட்டிப் பேசினுர்.

★ தூய்மையில் நல்லன எல்லாம் அடங்கிவிடுகிறது ★

## தமிழில் வழங்கும் வடசொற்கள் சில

| | | |
|---|---|---|
| பிராணி | — | உயிருள்ளது |
| பிராதகாலம் | — | விடியற்காலம் |
| பிராது | — | முறைப்பாடு |
| பிராந்தி | — | மயக்கம் |
| பிராபவம் | — | முதன்மை |
| பிராயச்சித்தம் | — | குற்றநீக்கம் |
| பிராயம் | — | ஆண்டு |
| பிராரத்தம் | — | ஊழ்வினை |
| பிரார்த்தனை | — | வேண்டுகோள் |
| பிரியம் | — | அன்பு |
| பிரீதி | — | அன்பு |
| பிருதிவி | — | மண் |
| பிரேதம் | — | பிணம் |
| பிரேரகம் | — | ஏவுதல் |
| பிரேரித்தல் | — | நடத்தல் |
| பீஜம் | — | விதை |
| பீஜாட்சரம் | — | மூலஎழுத்து |
| பீடம் | — | இருக்கை |
| பீடிகை | — | பூந்தட்டு |
| பீடை | — | துன்பம் |
| பீதி | — | அச்சம் |
| பீதாம்பரம் | — | பட்டாடை |
| புஜங்கம் | — | பாம்பு |
| புயம் | — | தோள் |
| புத்தகம் | | நூல் |
| புட்பம் | — | பூ |
| புட்பராகம் | — | வெள்ளைக்கல் |
| புட்பவதி | — | பூப்பானவள் |

## சிவானந்த குரு நினைவு

உலகில் பெரிய கண்டம் ஆசியா. உயர்ந்த மலை இமயம். உயர்ந்த இடத்துக் குரு பீடம் ரிஷிகேசம். உலகப்புகழ் பெற்ற தற்காலச் சுவாமி சிவானந்தர். இப்படியாக இன்னும் அடுக்கிக்கொண்டு போகலாம்.

இந்து மதத்தில் எல்லோரும் எல்லோருக்கும் என்னும் கருத்தில் எந்நாட்டவரையும் சீடராக்கிப் பிராணுயாமம் முதலிய பழக்கி நேரான வழியில் போகச் செய்தவர் சிவானந்தர்.

காசியில் கங்கையில் நீராடி விசுவநாதரையும் விசாலாட்சியையும் காலபைரவரையும், குமரகுருபரரின் மடத்தையும் தரிசித்த பின் மேலே ஹரத்துவாரம் பார்க்கச் சொல்லும்.

ஹரத்துவாரத்துக்குமேலே சாதாரண மக்கள் காணவுள்ளது ரிஷிகேசம். காடடர்ந்து கிடந்த பழைய பசு மடத்தை உலகப்புகழ்பெற்ற ஞானபீடமாகக் காணவைத்த வைத்தியர் குப்புசுவாமி உடற்பிணி நீக்கியபின், உயிர்ப் பிணி தீர்க்க வழிகண்ட சுவாமி சிவானந்தராஞர்.

சித்துக்கள் உள்ளிருந்து பீறிட்டுக்கொண்டு வரும் அவற்றை வர்த்தகத்துக்கோ, சீடர்களின் பெருக்கத்துக்கோ பயன்படுத்தலாகாது என்று கவனமாக நடந்தவர் சிவானந்தர். சாதகர்களுக்கும் வழிகாட்டியுள்ளார். புல்லைப் பூவாகவும் கல்லைக் கற்கண்டாகவும் காட்டும் மாயா சாலம் குருபீடத்துக்கு ஒவ்வாது.

சிவானந்தர் பழக்கிவிட்டுப்போன பழக்கம் பாரம் பரியமான பாரதப் பண்பாடுகண்ட பக்திதான். பக்தி வயப்பட்டவர்களிடம் சாதி, சமயம், இனம், மொழி, நிறம், நாடு முதலிய வேறுபாடுகளைக் காணலாகாது. எல்லோரும் அந்நிலையில் ஒருவரே.

உலகமொழியான ஆங்கிலத்தில் சின்னஞ்சிறு பிள்ளைகளும் தாளம்போட்டுப் பாடக்கூடிய மழலைப்பாடல் வரிசையில் ஆங்கில வசனங்கள் எழுதிப்பரப்பிய பெருமை, உபநிடதச் சிந்தனையிற் குஞ்சுபொரித்தமாதிரி அமைந்துள்ளது.

இமயமலைச்சாரலில் அமைந்த ஆனந்தகுடீர் பெரிய அருள் பண்ணையாகி அகிலத்தின் ஆத்மீகத் தலைநகரானது. உலகமளாவிய திவ்விய ஜீவனசங்கங்களின் இருதயஸ்தானமானது.

சிவானந்தரின் ஆத்திசூடி போன்ற சிறிய நூல்கள் முதல் வேதாகம விருத்திகள் போன்ற நூல்கள்வரை பன்னூற்றுக்கணக்கான வெளியீடுகள் பல்லாயிரக்கணக்கான மக்களை வாழப் பழக்கியுள்ளன.

மிருகவாழ்வு நீக்கி மனிதவாழ்வு கண்டு, அதனையும் நீக்கித் தெய்வவாழ்வு வாழ விரும்பும் உலகத்தவர் பலர், சிவானந்த குடிலிலிருந்து வரும் ஒளிவீச்சில் தம்மை மறந்து தியானத்திலிருக்கிருர்கள்.

## கடமையோ கடமை

அகராதியில் உள்ள ஆயிரக்கணக்கான சொற்களுள் கடமை என்னும் சொல் எந்த மொழியிலாயினும் சரி, கனத்தது, புனிதமானது, பெறுமதியானது, மதிப்பானது, மகத்தானது, மாண்புள்ளது.

ஒருவன் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறதோ அதுவே கடமை. கடமை இரண்டு வகைப் படும்: செய்யவேண்டியவை. செய்யக்கூடாதவை.

செய்யவேண்டியவற்றைக் கட்டாயமாகச் செய்தல் கடமை. அது தன்னைப் பொறுத்தது, குடும்பத்தைப் பொறுத்தது, சமூகத்தைப் பொறுத்தது, நாட்டைப் பொறுத்தது. கடமை செய்பவனுக்கு இன்னல்கள் யாவும் தூசாகும். அவன் இன்னல்களைப் பொருட்படுத்த மாட்டான். கடமையே கண்ணுயிருப்பான்.

★ சுயநலம் அற்ற செயல்களே அறச்செயல்கள் ★

முற்றொடர்:-

# இன்னாதவை, தீயவை, பயனில்லாதவை

51. காவல் இல்லாத ஊரில் வாழ்தல்.
52. தீயவருடன் நெருங்கிப் பழகுதல்.
53. செருக்கு நிறைந்தவருடன் நட்புக்கொள்ளல்.
54. பொழுதுபோக்காகவாகுதல் சூது ஆடுதல்.
55. நண்பரின் துன்பம் கண்டு வாழா இருத்தல்.
56. பெரியவர்களின் தொடர்பை நீக்குதல்.
57. அரியன செய்வேன் என்று வீரம் கூறுதல்.
58. அன்பில்லாதவரிடம் தம் துன்பம் கூறுதல்.
59. பெரியவர்கள் மனம் நோவ நடத்தல்.
60. இளமையிலே வாடி மூப்படைதல்.
61. கல்லாதவன் கூறும் சொற்பொருள்.
62. அடக்கத் தெரியாதவன் பாம்பு ஆட்டுதல்.
63. ஆழமறியாத நீரில் குதித்தல்.
64. அடக்கமில்லாமல் மறைப்பொருள் கேட்டல்.
65. உயர்ந்த இடத்திலிருந்து நீரில் குதித்தல்.
66. பண் அமையா யாழுடன் பாட்டுப் பாடுதல்.
67. வெறும் மத்தளத்தின் வெற்றொலி கேட்டல்.
68. புறம் கூறுவோர் கூறும் சொல்.
69. பழம் பெருமையுள்ளவர் தாழ்வுறுதல்.
70. ஒழுக்கமில்லாதவருடன் உறவுமுறை கூறுதல்.
71. விருப்பமில்லாதவருக்கு நூற்பொருள் கூறுதல்.
72. நல்ல மரத்தால் செய்யப்படா இசைக் கருவி.
73. குழந்தைகளுக்கு நோய்கள் உண்டாதல்.
74. சிறியவர்களிடம் சினம் கொள்ளுதல்.
75. பிறர் மனைவியைக் காமநினைப்பில் பார்த்தல்.
76. முயற்சியில்லாதவன்கொண்ட பெருமிதம்.
77. அடங்காதவருக்குக் கூறும் அறவுரை.
78. திறமையில்லாதவன் செய்யும் செயல்கள்.
79. பிறர் வைத்த பொருளைக் கவர்தல்.
80. துறையை அறியாதவன் நீரில் இறங்குதல்.

— ஆதாரம்: இன்னாநாற்பது

# கொத்து மல்லி

கொத்தமல்லி என்றும், மல்லி என்றும் வழங்கும் இந்தச் சரக்கு, கறிச் சரக்காகவும் மருந்துச் சரக்காகவும் மனிதர்க்குப் பெரும் பயனளித்து வருகின்றது. இறக்குமதிப் பண்டமாக நிலவும் இதனை எங்கள் நாட்டில் இதுவரை தோட்டப்பயிராகவோ, வயற்பயிராகவோ எவரும் பெருமளவில் விளைவு செய்ய முன்வரவில்லை. மிக விரைவில் இங்கே அதிக மல்லி விளையும் நாள் விடியும்.

## மல்லிக் கீரை

தென்னிலங்கையில் சிங்கள மக்களிடையே மல்லிக் கீரை பரவலாகப் பயனளிக்கிறது. சிறு செடியாக உண்டாகும் இதனை அவர்கள் பிடுங்கி நாலு ஐந்து செடிகளைப் பிடியாக்கி நல்ல விலைக்கு விற்றுர்கள். சம்பல் அரைக்கவும், ரசத்துக்குச் சேர்க்கவும், சுண்டல்போல் வறுக்கவும் மல்லிக்கீரை இதந் தருகிறது. நாங்கள் விதையை மாத்திரம் பயன்படுத்துகிறோம் - இலையை நினைப்பதில்லை.

## இலை

இதனை உண்பதால் வாத அரோசகம், பித்த வருக்கம், பித்த சுரம் முதலியன நீங்கும். உடல் வன்மையும் வனப்பும் சுக்ல விருத்தியும் உண்டாகும். மல்லி இலையை எண்ணெய்விட்டு வதக்கி வீக்கம், கட்டிகளுக்குக் கட்டுவதால் சுகம் உண்டாகும். இதன் அருமை பெருமைகளைச் சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள் பாடியுள்ளார்.

கொத்துமல்லிக் கீரையுண்ணிற் கோரவ ரோசகம்போம்
பித்தமெல்லாம் வேருடனே பேருங்காண் — சத்துவமாம்
வெச்சனவே போகம் விளையும் சுரந்திரும்
கச்சுமுலை மாதே! நீ காண்.

## விதை

கொத்துமல்லி உட்சூடு, நளிர்ச்சுரம், பயித்தியக் குணம், அசிரணம், வாந்தி, விக்கல், நாவரட்சி, பெரும ஏப்பம், புளிச்சல் ஏவறை, வயிற்றுப் பொருமல், அக்கினி மந்தம் முதலியன நீங்கும். சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர் இதன் குண மகிமைகளைக் குறித்துப் பாடியுள்ளார்.

கொத்துமல்லி வெப்பம் குளிர்காய்ச்சல் பித்தமந்தஞ்
சர்த்திவிக்கல் தாகமொடு தாதுநட்டம் — கத்தியெழும்
வாத விகாரமடர் வன்கர்த் தபிவிரணம்
பூதலத்தில் லாதகற்றும் போற்று.

கொத்துமல்லியை வறுத்தும் அவித்தும் பலவிதமாகப் பருகலாம். உதிரபேதி, அசிரணம், தடிமன் ஏப்பம் நீங்கும். சோம்புடன் சேர்த்தும் பயன்படுத்தலாம்.

சந்தனத்துடன் அரைத்துப் பூசத் தலைவலி தீரும். சந்தனம், நெல்லி வற்றல், மல்லி மூன்றும் சமமாக எடுத்து நீரில் ஊறவைத்துப் பருகத் தலைச் சுற்று தீரும்.

மல்லிச் கசாயம் யூனுனி வைத்தியரிடையே மகப்பேற்றுத் தாய்மார்களுக்கு மகத்தான ஔடதமாக நிலவுகிறது. மல்லியை மென்று வருவதால் வாய் நாற்றம் நீங்கும்.

# புத்தகப் புதினம்

## ஸ்ரீமூக பஞ்சசதி

அருட்புலவராய ஸ்ரீமூக கவி இளமையில் ஊமையாயிருந்து திருவருள் பெற்று, காஞ்சி காமாட்சியம்பாள்மீது கொண்ட பக்திரசம் ததும்ப 500 சுலோகங்களில் பாடியது இந்நூல். ஸ்ரீமூக கவி சமஸ்கிருதத்தில் பாடியதை பாலசுப்பிரமணிய சாஸ்திரியார் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்.

ஸ்ரீமூககவியின் பஞ்சசதி பெயருக்கேற்ற வகையில் ஆர்யாசதகம், பாதாரவிந்தசதகம், ஸ்துதிசதகம், கடாட்சசதகம், மந்தஸ்மிதசதகம் என்னும் ஐந்து பகுதிகள் உள்ளது.

★ ஆற்றல் அதிகரிக்க அமைதியும் அதிகரிக்கும் ★



# முருங்கை

## முருங்கைக்காயின் பலன்

(ஆர். லோகநாதன்)

முருங்கை மரத்தின் மருந்துச் சக்தியை அறிந்தோ அறியாமலோ நாம் அடிக்கடி முருங்கைக்காயை சமைத்துச் சாப்பிட்டு வருகிறோம். முருங்கைக்காய் சாம்பார் பலருக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. 'நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் ஏற்பட்ட ஒரு பஞ்சத்தின் போது, பல கிராம வாசிகள் முருங்கை வேரையும் பட்டையையும் சாப்பிட்டே உயிர் வாழ்ந்தார்கள், என்ற ஒரு செய்தியை டாக்டர் மருத்துவமணி எடுத்துக்காட்டுகிறார்.

முருங்கைக்காய் சாம்பார் சுவையோடு இருப்பது மட்டுமல்லாமல், மலச்சிக்கல், வயிற்றுப் புண், கண்நோய் இவற்றுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது. வாரத்தில் ஒரு முறையோ இரண்டு முறையோ முருங்கைக்காயை உணவாக உபயோகிப்பதால், ரத்தமும் சிறுநீரும் சுத்தி அடைகின்றன. வாய்ப்புண் வராதபடி பாதுகாப்பு உண்டாகிறது. முருங்கைக்காய் சூப் காய்ச்சலையும் மூட்டு வலியையும் போக்கிவிடுகிறது.

முருங்கைப்பட்டை, உலோகச்சத்துக்கள் நிறைந்தது. உணவில் கலந்த விஷத்துக்கும் நரம்புக்கோளாறுகளுக்கும் இது நல்ல மருந்து. முருங்கை மரத்திலிருந்து கிடைக்கும் கோந்து நல்ல டானிக்குகள் செய்யப்பயன்படுகின்றன. பச்சைக் கோந்தைக் காதில் ஒரு சொட்டு விட்டால் காது வலி உடனே நின்றுவிடும். இந்த மரத்தின் வேரும் பிசினும் சம்பந்தப்பட்ட டானிக்குகளை அடிக்கடி சாப்பிட்டுவந்தால், நரை சீக்கிரம் வராமல் தள்ளிப்போடும்.

சித்த வைத்திய முறைப்படி தயாரித்த பல தைலங்கள், பூச்சுகள், பற்றுக்கள், மாத்திரைகள், டானிக்குகள் இவற்றிலெல்லாம் முருங்கை மரத்தின் பகுதிகள் நிறையக் கலந்திருக்கின்றன.

(பொது அறிவுக் களஞ்சியத்திலிருந்து)

## முருங்கையோ முருங்கை

தமிழர் வாழ்வில் பனைமரம் போல வரட்சியைத் தாங்கி, தண்ணீர் இறைப்பின்றி முறிக்க முறிக்க செழித்துத் தழைத்து இலையும் பூவும் காயும் பட்டையும் பிசினும் வேருந் தந்து உணவும் மருந்துமாய்ப் பயன்தரும் முருங்கை அற்புத மூலியன்றோ.

எந்த நோயாளருக்கும் பத்தியம் என்றால் முருங்கைப் பிஞ்சு தேடி யோடிச் சமைத்துக்கொடுக்கிற நாம் நம் வளவில் ஒருமூலையில் நம்மைத் தேடிவந்த இந்த ஆடி மாதத்தில் நட்டு உண்டாக்கினால் என்ன நட்டம்.

முருங்கை உள்ளவர்கள் மற்றவர்களுக்கும் கொடுத்து நடச்செய்யலாம். ஒத்துதவி செய்வதில் இன்பங்காணலாம். வெற்றிடங்களில், குளக்கரைகளில் கிராமோதய நன்மை கருதி நட்டுவிட்டால், யாருக்கேனும் பயன்தருந்தானே.

பெரிய நிழல்தரு மரங்களை நட்டுவந்த எங்கள் பாரம்பரிய பழக்கத்தை மறந்துவிடாமல் உடன் பயன்தரும் முருங்கையை எங்கும் நட்டுப் பயன் செய்யலாம். வீட்டில் ஒரு முருங்கை நின்றால் உணவுத்தட்டுப்பாட்டு வேளையில் ஒரு வறை, சொதி சோறு. அதுவுமில்லாவேளையில் ஒரு இலைக்கஞ்சிறு உப்பின்றி வெந்த குப்பைக் கீரையுடன் ஒன்றுவிட்டு ஒருநாள் உண்டகாலமும் முன்னர் வந்துபோனது பழகிக்கொள்வோம்.


## ஒருகுழம்பில் இரண்டு சுவை

ஆறுமுகநாவலர் அவர்களுக்குச் சிவபூசைவேளையில் றோசாப்பூவிலும், உணவு வேளையில் முருங்கைக்காய்க் குழம்பிலும் விருப்பம். அவர் சிதம்பரத்தில் வாழ்ந்த காலத்தில் ஒருநாள் நண்பர்களுடன் உணவைப்பற்றிப் பேச்சு எழுந்தபோது, யாழ்ப்பாணத்து சமையற்பாகம் பற்றியும் பேசினர். நாவலர் அவர்கள் ஒரு குழம்பில் இரண்டு சுவை பெறத்தக்கதாக நம்மவர் சமையல் செய்வார்கள் என்றதும், தமிழ்நாட்டவர் அஃதெப்படியெனச் சந்தேகித்தனர். நாவலரவர்கள் தமது சமையற்காரனிடம் சமைத்துவா என்று வழிவகுத்து விருந்துகொடுத்தார். முருங்கைக்காய் குழம்பில் இரண்டு சுவைகண்ட அன்பர்கள் வெகுவாக வியந்து பாராட்டினர். இரகசியம் அதிகமில்லை. முருங்கைக்காய்த் துண்டுகளின் ஒருபகுதி மாத்திரம் நெய்யில் தோய்த்து பொரிக்கப்பட்டது. அதனால் குழம்பில் இரண்டு சுவை சுவைத்தன.

## தினசரி

சைவாசிரிய கலாசாலையில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களும், முத்துத்தம்பி வித்தியாசாலையைச் சேர்ந்த விடுதிப் பிள்ளைகளும் பலகாலமாகத் தினசரி என வழங்கிவந்த காய்கறிப் பண்டம் முருங்கைக்காய். சோறாயினும், பிட்டாயினும், பாணாயினும் செம்பாட்டு முருங்கைக்காய்ச் சாம்பாறு, குழம்பு இல்லாமல் வரா. மூளைசாலியான கௌரவ சு. இராசரத்தினம் அவர்கள் சைவம் வளர்த்த முறையில் செம்பாடெங்கும் முருங்கை வளர்த்துப் பிள்ளைகளை வாழவைத்தனர். மருத்துவர் செலவு அக்காலத்தில் மிகக்குறைவு என்றே சொல்லவேண்டும்.

★ ஆசை பிடித்தவருக்கு அமைதியில்லை ❀



## சிறுவர் பகுதி

# பாட்டிலே கேள்வி

"பிறையணிவோன்"

தமிழ்நாடு.

1. அறத்தைப் பொருளை இன்பத்தை
அடிகள் குறைந்த பாடலினால்
திறமாய்ப் பாடிப் பார்புகழச்
சிறந்தோன் யாரே செப்பிடுவீர்?

2. மூட அரச மைந்தருக்கு
மூல பஞ்ச தந்திரத்தைப்
பாட மாகக் கதைமூலம்
படிக்கச்செய்த அறிஞன் யார்?

3. ஓரஞ் சொல்லேல் எனநூலை
ஓதிமுடித்த பெரியார் யார்?
தீரஎண்ணி அவர் செய்த
சிறிய நூலின் பெயர் சொல்வாய்

4. உலகநீதி என்னும் நூலை
உள்ளங் கொள்ளும் நடையினிலே
புலவர் ஒருவர் எழுதி வைத்தார்
புலவர் பெயரைச் சொல்வீரா?

5. நன்மை பயக்கும் நன்னெறியை
நாமெல் லோரும் ஓதிடவே
கன்னல் தமிழில் பொம்மபுரக்
கடலின் கரையில் பாடியதார்?

1. திருவள்ளுவர் 2. சோமசன்மா
3. ஔவையார் - ஆத்திசூடி 4. உலகநாதனார்
5. துறைமங்கலம் சிவப்பிரகாசர்

## தடிவிளக்குமாறு தும்புக்கட்டு

நம் பிரதேசத்தில் தடிவிளக்குமாறு, தும்புக்கட்டு ஆயிரக்கணக்கில் உற்பத்தியாகட்டும். அதுவரை நாரியை வளைத்துத் தயவுசெய்து குனிந்து கூட்டிப்பழகுவோம்.

வேலையற்றிருக்கும்போது விளையாட்டாகப் பன்ன வேலை பழகிச் செய்வோம். புற்பாயிலும் பார்க்கப் பனை யோலைத் தடுக்குப்பாய் பச்சிளங் குழந்தைக்கே நல்லது.

# போனது போகட்டும் புதுவாழ்வு மலரட்டும்

வரண்ட நிலமாயினும் வெறுங்காணியெங்கும் பயன் தரும் தாவரங்கள் நிறையட்டும். நம்புட்டான், மங்குஸ் தான் பழங்களில் பார்க்க நாவற்பழம், இலந்தைப்பழம், பப்பாப்பழம், நெல்லி, அரிநெல்லி நூறுமடங்கு தர மானவை, சத்துள்ளவை.

அடுத்து வரும் மழையோடு வளவெல்லாம் பயன் தரும் செடி கொடிகள் மரங்கள் முளைக்கட்டும். பனையைத் தறிப்பதை தவிர்ப்போம். வெகுவாகக் குறைப்போம். விரைவில் பயன்தரும் தென்னை வளர்ப்போம். இளநீர் விலையேறுகிறது.

## உணவும் மருந்தும்

சோறும் கறியும் உணவு. பாணும் வெண்ணெயும் உணவு. கிழங்கும் சம்பலும் உணவு. ஆனால் முருங்கை இலை, காய் சேர்த்த கறியும் சோறும் உணவும் மருந்து மாகும். சித்தவைத்தியரின் அற்புத ஏலாதிக்குளிகைகள் உணவாயும் மருந்தாயும் உடலைத் தேற்றும் என்பதை எவரும் அறிவர்.

முருங்கைப்பட்டையில் பலவித உலோகச்சத்துகள் உண்டு. அந்த அந்த உலோகங்களைப் பொடிசெய்து உண்ப தால் உலோகச்சத்து உடலில் செறியாது. ஆனால் முருங் கைப் பட்டையில் உள்ள உலோகம் உடலில் செறிந்து பயன்தரும். பாகம்பண்ணிச் சாம்பார், சூப் முதலியவற் றில் பயன்காணலாம். பட்டையைப்போல வேரும் பயன் தரும். உணவிற்கலந்து வந்தவிடத்தன்மையிருந்தால் அதனை வெட்டி நல்ல சுகத்தைத்தரும். இரத்தசுத்திக்கு முருங்கைக்காய், இரும்புச் சத்துக்கு முருங்கையிலை.

## பொருளாதார நிபுணர்

உலகத்தை அதிசயிக்கச் செய்த அற்புதமான பொரு ளாதார விவேகி தமிழ்நாட்டு குமரப்பா அவர்களாவர். குமரப்பா சொன்னவற்றை மகாத்மாகாந்தியடிகள் பரீட் சித்துப்பார்த்து, முற்றாக ஏற்றுக்கொண்டு, தமக்கு உண்டான மனப்பதிவினால் குமரப்பா எதைச் சொன்னாலும் அவர் ஏற்றுக்கொள்ளும் இயல்பினரானார்.

குமரப்பா மகாத்மாவின் ஆச்சிரமத்தில் அடுப்படி வேலைகள் செய்ததோடு, பாத்திரங்களையும் தம்கையால் பொச்சுப்பிடித்துத் தேய்த்துச் சுத்தஞ்செய்து வந்தார். தொழிலின் மகத்துவம் அறிந்த குமரப்பா உண்மையில் பெரியவர்.

## நாம் விரும்பும்போது மழை வேண்டும்

நாம் விரும்பும்போது போதிய மழை பெய்யவேண்டும். மழை பெய்து தானியங்கள் நன்றாக விளைந்து பெருக வேண்டும். விளைவுகள் எங்களை வளம்படுத்தி வாழவைக்க வேண்டும்.

(இது யசுர் வேதத்தில் மழை வேண்டிச் சொன்ன வாசகங்களின் தமிழ்ப்பெயர்ப்பு).

★ விசுவாசம் உள்ளவனுக்கு எல்லாம் உண்டு ★




# பகவத் கீதை

உலக நன்மையைக் கருதித் தொழில் புரிதல்வேண்டும்.

உயர்ந்தவர் செய்வனவற்றையே உலகத்தவர் பின்பற்றுகிறார்கள்.

சோம்பல் இல்லாமல் செய்யவேண்டியவற்றைச் செய்தல் தருமம்.

அறிவுள்ளவன் உலக நன்மையையே என்றும் கருத்தில் கொண்டவன்.

அகங்காரத்தால் மயங்கி நான் செய்கிறேன் என்பது தகாது.

ஞானியும் இயற்கைக்குத் தக்கதாகவே நடந்துகொள்கிறான்.

சினமும் பற்றும் உலகத்தைச் சூழ்ந்து அழிவு செய்கின்றன.

விருப்பம் என்பது என்றும் தணியாத தீ. அது ஒரு அழுக்கு.

விருப்பம் என்னும் பற்றினாலேதான் மனிதன் மயக்கங் கொள்கிறான்.

## முதல் வரலாற்றாசிரியர்

உலகத்தின் முதல் வரலாற்றாசிரியர் வியாசர். இவர் 5800 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். வேதங்களை நான்காகத்தொகுத்தவர். தொகுப்பாசிரியர் என்றதால் இவருக்கு வியாசர் என்று பெயர் வழங்கியது. இவரின் இயற்பெயர் கிருஷ்ணர். காரணம் கறுப்பு நிறத்தவர். இவர் இலந்தைக்காட்டில் தவஞ்செய்தமையால் பெற்ற பெயர் வாதராயணர். இவர் உலகத்தின் நன்மைக்காகத் தோன்றியவர். இவரின் தந்தையார் சாக்தேயர். சாக்தேயர் தர்க்கம் அறிந்து கூறிய சொற்களால் வாதாடியதால் பராசரர் எனப்பெயர்பெற்றவர். சரம் - அம்பு. பரா - பிறர் பிறருக்கு அம்புபோன்றவர். பராசரரின் தந்தை சக்தி. சக்தியின் தந்தையே வசிட்டர். வசிட்டரின் மனைவி அருந்ததி.

வியாசர் பாரம்பரியமாய் அறிந்து சொன்னவிடயம் தருமம். தருமத்தைவிடப் பெரியது எதுவுமில்லை. தருமத்தை அறிய ஆசைப்பட்டவர்களுக்குத் தருமசாத்திரங்கள் எழுந்தன. அறஞ்செய விரும்பு என்பது ஔவையாரின் வாக்கு. புத்தரும் தருமத்தை அறிந்து தம்பதம் சொன்னவர்.

## பிறநாட்டவர் இப்படியும் சொன்னார்கள்

1. ஆழ்ந்த நித்திரைக்குப் பின் அரிய சிந்தனை வரும்
2. சோம்பல்தனம் கந்தை உடுப்புப்போன்றது
3. கடமையின் பாதை நேரானது
4. விரும்பிச் செய்வன யாவும் சுலபமானவையாகும்
5. நீ உண்பதைச் சொல். உன் தன்மையை நான் சொல்வேன்
6. பகைமையை தேடுவதில் கவனமாய் இருக்கமுடியாது
7. சாட்டுச்சொல்லுதல் பொய்யை மறைப்பதைக் குறிக்கும்
8. வாழ்க்கை என்பது விதியினால் நிரப்பப்பெற்றதாகும்.
9. மீனவன் நித்திரையானாலும் வலை மீன்பிடிக்கும்
10. முகஸ்துதி கூறுதல் முன்னர் குற்றம். இன்று சாதாரணம்
11. மடையரிடமிருந்து புத்திசாலி அதிகம் படிக்கிறான்
12. புத்திசாலிகளிடமிருந்து மடையன் ஒன்றும் படிப்பதில்லை
13. மடையருள் புத்திசாலி, புத்திசாலிகளுள் மடையன்
14. விவேகிகளிற் பார்க்கக் குழப்பஞ்செய்யும் மூடர் குறைவு
15. ஒரு மடையன் வினவுக்கு ஒன்பது புத்திசாலிகள் விடைகூறவியலாது

## வனமகோற்சவம்

பிரதிஷ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி, பிராயச்சித்தம் என்று திருக்கோயில் உற்சவங்கள் என்னும் பெருந்திருவிழாக்களைப் பற்றிச் சொன்ன பெரியவர்கள் வனமகோற்சவம் என்னும் மரம் நாட்டும் விழாவையும் கூறியுள்ளார்கள்.

1. மரங்கள் இலைகள், பூக்கள் வேர்களினால் பிதிரர்கள், தேவர்கள் முதலானோரைத் திருப்திப்படுத்துகின்றன.
2. வீதியோரத்தில் நிழல் தரு மரத்தை நட்டவனின் தருமம் புதல்வர்களைப் பெறுவதிற் பார்க்கப் பெரிது.
3. வளர்ந்த மரங்கள் நிழல் தருவதோடு, இலை, பட்டை மலர், காய், கனி தந்து மகிழ்விக்கின்றன.
4. மரத்தடிக்குப் போனவரை வெறுங்கையோடு திருப்பி விடாமல் மரம் இலை, பூ, காய், கனி, பட்டை முதலியனவற்றைக் கொடுக்கிறது.
5. மக்கள் வருடமொருமுறை திவஷம் செய்வார்கள். மரங்கள் என்றும் பயன்கொடுத்துப் புகழ்பரப்பி நிற்கும்.
6. மரம் நடுகையில் விளாத்தியும் இடம்பெறுகிறது. எனவே நாம் வரண்ட வெறும் இடங்களில் விளா நட்டு வளரவிடுவோமாக.
7. மரங்கள் வெயிலில் நின்று தாம் வாடினாலும் வந்தவருக்கு நிழல் கொடுத்து ஆற்றுகின்றன.
8. பிறவி எடுத்ததன் பயன்களும் மரம் நடுதலும் ஒன்று. மரம் நடாதவன் தன் தாயின் அழகைக் குறைக்கப் பிறந்த இறைச்சிப்பிண்டம்.

★ சுயநலம் இல்லாதவன் வாழ்வில் வெற்றிபெறுவான் ★

# அருள் விருந்து

(ஆதாரம்: தர்மசக்கரம்)

1. துன்பத்துக்குப் பிறப்பிடம் ஆசை
2. உலகம் ஓலமிடும்போது நீ வாய்பொத்தியிரு
3. வழிபாட்டினால் மனபரிபாகமடைதல் வேண்டும்
4. இரக்கம் உள்ள உள்ளம் கோயிலாகிறது
5. திருப்திக்கு நிகரான நோன்பு இல்லை
6. பணிவு எல்லோருக்கும் பொதுவான பூணூல்
7. இயற்கையை அறிந்தவன் இறைவனை அறிவான்
8. பிரார்த்தனை மூலம் நம்மைப் புதுப்பிக்கலாம்
9. ஆழமான மனத்தில் சலசலப்பு இல்லை
10. செயலில் ஈடுபட்டவன் ஒளிவீசுகிறான்
11. சத்தியம் கட்டாயம் காப்பாற்றும்
12. தர்மமும் சிரத்தையும் நமக்கு அவசியம்
13. உலகவிடயங்களுக்குக் காது கொடுத்தலாகாது
14. மனச்சஞ்சலத்தை நீக்குவதே மௌனமாகிறது
15. பேராசை மனதை மலினப்படுத்துகிறது
16. மனவடக்கமில்லாதவனுக்குத் துக்கம் வரும்
17. மனத்தைத் திருத்த உலகக்காட்சி திருந்தும்
18. பிறர் சொத்தை அபகரிப்பவன் முன்னேறுவதில்லை
19. தூய்மை, பொறை, முயற்சி வெற்றிக்கு வழி
20. உறுதியுள்ளவன் பிறர்க்குத் தீமை செய்வதில்லை
21. இறைவனோடு உறவாடத் தனியிடம் நல்லது
22. சன்மார்க்கம் செங்குத்தான நல்லவழி
23. நேர்மையைவிட நல்லவழி எதுவும் இல்லை
24. உன்மீது உனக்கு முதலில் நம்பிக்கை வேண்டும்
25. சிரமப்படாமல் எதையும் சாதிக்க முடியாது

## உண்மையின் உயர்வு

1. உண்மையே அறங்கள் யாவுக்கும் தாய். உண்மையின்றேல் எதுவும் பிரகாசிக்கமாட்டாது. உண்மையின் உயர்வை எல்லா நூல்களும் போற்றுகின்றன.
2. உண்மையே உயர்ந்தது. உண்மையே தெய்வம். உண்மையே உயர்ந்த விரதம். உண்மையே உயர்ந்த யாகம். உண்மையே உயர்ந்த ஞானம்.
3. உண்மை என்றும் உறங்குவதில்லை. உண்மை என்றும் நம்மைக் காப்பது. உண்மையின் வழியே உலகம் உண்டானது. உண்மையில் எல்லாம் அடங்கியிருக்கும்.
4. உண்மையே வழிபாடு. உண்மையிலே தேவர்கள், முனிவர்கள், பிதுரர்கள் பிரகாசிக்கின்றார்கள்.
5. உண்மையே தர்மம், உண்மையே மந்திரம், உண்மையே வாக்கு, உண்மையே சரஸ்வதி, உண்மையே பிரணவம், உண்மையே பிரமசாரியம்.
6. ஆயிரம் அஸ்வமேதயாகங்கள் ஓர் உண்மைக்குச் சமமாகும். உண்மை யாகங்களிலும் சிறந்தது.
7. உண்மையே உயர்ந்தது, உறுதி தருவது, உய்தி தருவது. ஆகவே உண்மை பேசி உத்தமனாக வாழ்தல் வேண்டும்.

## எங்கள் பாராட்டும் வாழ்த்தும்

அந்த இடைமருதின் ஆனந்தத் தேன் சொரியும் அப்பன் மகாலிங்கத்தின் அருளுக்குப் பாத்திரமாய அன்பர் நா. மகாலிங்கம் அவர்களின் அறுபதாம் ஆண்டு இளமை நலம் வாழ்த்தும் கோலாகல விழாவில் சிவபூமியாய இலங்கைத் திருநாட்டின் சார்பில், சிவம்பெருக்கும் செம்மல் அவர்களுக்கும், அவர்தம் இல்லத்தரசி மங்கலந்ததும்பும் மாது நல்லாள் மாரியம்மாளுக்கும் எங்கள் பாராட்டும் வாழ்த்தும் இன்னும் பல்லாண்டுக்காலம் நின்று நிலவி வாழவைக்குமாறு அம்மையப்பரைத் திரிகரணசுத்தியோடு வேண்டிக்கொள்கிறோம்.

வணக்கம்

திருஆலவாய், மில்க்வைற் தம்பதிகள்
யாழ்ப்பாணம். கனகராசா-நாகம்மா

## சிட்டாசாரம் தேவை

பழைய தமிழாசிரியர் தங்கள் பயிற்சிக்காலத்தில் சிட்டாசாரம் என்றொரு பதத்தை நன்கறிந்தனர். தென்னிலங்கையிலும் இது சிட்டாசாரய என வழங்குவது. வேறொன்றுமில்லை அடக்கம், ஒழுக்கம், கட்டுப்பாடு, நாணம், பண்பாடு முதலிய சீலங்கள் சேர்ந்த ஒரு ஒழுங்கு முறை.

சிட்டாசாரம் இன்று கிறும் என்னவில்லை என்று கேட்குமளவில் குடிபோய்விட்டது. வழிப்பறி, வன்செயல், பயமுறுத்தல், ஏமாற்றுதல் முதலிய எத்தனையோ நடபடிக்கைகள் நாட்டில் தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றன.

எங்கள் பிள்ளை நல்ல பிள்ளை. அவன் சோலிசுரட்டுக்குப் போகான் என்று நம்பியிராமல் பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் கவனித்தல் விரும்பத்தக்கது. ஆசிரியர்கள் கடவுளுக்குச் சமமானவர்கள். கொஞ்சம் கடைக்கண் சாத்தினால் நல்லது.

நம் கோயிற் குருக்கள்மார் பூசை ஆரத்தி எல்லாம் முடிந்தபின், திருநீற்று மடலை ஏந்திவந்து நின்று மூன்று நிமிடம் நல்ல சிந்தனை பேசியபின் திருநீறு, தீர்த்தம், சந்தனம் கொடுத்தால் - தாய், தந்தை, பிள்ளைகள் நல்ல வழியில் நடக்கவேண்டும் என்று மனங்கொள்வார்கள். அடியார்கள் மனத்தில் குருக்கள் வாக்கு வேதவாக்கு, அசரீரிவாக்கு என வழங்கவேண்டும்.

## உண்மை

உண்மை, வாய்மை, மெய்மை என்பன ஒரு சொல். சத்தியம் என்பது அதன் வடசொல். உள்ளத்தின் நேர்மை உண்மை; வாக்கின் நேர்மை வாய்மை, உடம்பின் நேர்மை மெய்மை. திருவள்ளுவர் இம் மூன்றையும் கூறியுள்ளார். உபநிடதங்கள் சத்தியந்தவருதே என்கின்றன. அரிச்சந்திரன் சத்தியவிரதன். மகாத்மாகாந்தி சத்திய சோதனை செய்து வாழ்ந்தார்.

தைத்திரிய ஆரண்யகம் சத்தியத்தால் காற்று வீசுகிறது என்றும், சத்தியத்தால் சூரியன் ஒளி வீசுகிறது என்றும், சத்தியத்தால் சொற்கள் நிலவுகின்றன என்றும் சத்தியமே கடவுள் என்றும் கூறுகிறது.

★ **கடமை செய்பவனிடம் கடவுள் தன்மை உண்டு** ★

## உங்களுக்குத் தெரியுமா?

(விடைகள் வேறிடத்தில்)

1. பாம்பில்லாத நாடு எது?
2. மீனினத்தின் தொகை என்ன?
3. உணவிலேயே நீர் கொள்ளும் உயிரினம்?
4. இன்புளுவென்சா - எந்த மொழிச் சொல்?
5. இன்புளுவென்சா - சுருக்கப் பெயர்?
6. கருஜ் - கார்விடும் இடம். கருத்து என்ன?
7. கருஜ் - எந்தமொழிச் சொல்?
8. ரஷ்ய இடங்கள் கிராட் என வழங்குவது ஏன்?
9. அட்மிரல் என்பது எந்த நாட்டுச் சொல்?
10. அட்மிரல் என்பதன் கருத்து?
11. மிசிசிப்பி என்பதன் கருத்து?
12. பொதுத் தேவைக்கான மோட்டார் வண்டி?
13. பசிபிக் சமுத்திரத்தின் கிழக்கு எல்லை?
14. சந்திரன் வரவர ஆற்றல் குறைவது ஏன்?
15. எது எமக்குத் தூரத்தது. சூரியன்: துருவ நட்சத்திரம்?
16. விமானங்களில் உள்ள பரூ மீட்டரின் பெயர்?
17. ஒவல் எனப்படும் கிறிக்கற் மைதானமுள்ள வட்டாரம்?
18. பிங்பொங் என்பதன் புதுப் பெயர்?
19. மொனுலிசா ஒவியத்தின் மறுபெயர்?
20. விண்வெளி சென்ற முதற் பெண்மணி?
21. பொதுவுடைமை கண்ட ஜேமனியர் இருவர்?
22. ஐரோப்பிய நாடுகளின் புனரமைப்புக்கு அமெரிக்க உதவித் திட்டம்?
23. கியூபா நாட்டின் மொழி?
24. நைல் நதியின் நீரைக் கட்டுப்படுத்தும் அணை?
25. கரிபா அணைகட்டுப்படுத்தும் நதி எது?

## நலம் தரும் அபிவிருத்திப்பாதை

எல்லோரும் நன்மையடைதல் வேண்டும். எல்லோரும் வாழ்தல் வேண்டும். எல்லோருக்கும் வேலை இருத்தல் வேண்டும். எல்லோருக்கும் உறைவிடம் இருத்தல் வேண்டும். எல்லோருக்கும் கல்வியறிவு கட்டாயம் வேண்டும். எல்லோருக்கும் நல்ல சுகாதாரம், சூழல் அமைதல் வேண்டும்.

மூளைகுறைந்தவர், ஆதரவு இல்லாதவர், மூப்பு அதிகரித்தவர் இப்படியான குறைபாடுள்ளவர்களுக்கு ஆதரவளிக்கும் இல்லங்கள், சாந்தி இல்லங்கள், அறச்சாலைகள் அமைதல் வேண்டும். துன்பம் துயர் உள்ளவர்களின் குறைகளைப் போக்கத் தனியார்களுள் நிதி வசதியுள்ளவர்கள் முன்வருதல் வேண்டும்.

சமூக சேவை மகத்தான சேவை. மக்கள் சேவை மகேஸ்வரன் சேவை என்னும் கொள்கை மனப்பதிவில் இருத்தல் வேண்டும். வாழும் சமுதாயத்துக்கு உன்னுடைய உயிரான உபகரிப்பு என்ன என்று கேட்டால், தருமவான்கள் தகுந்த விடை கூறத் தயாராயிருத்தல் வேண்டும்.

பிள்ளைகளைப் புறக்கணித்தல், மூளைப் பெலமில்லாமை, வேலையற்றிருத்தல் முதலான வழிகளால் சமூகக் குறைபாடுகள் உண்டாகின்றன என்று சிட்னிவெப் அன்று கூறினுர்.

வசதி, வாய்ப்பு, திறமை, சேவை மனப்பான்மை வாய்ந்த வைத்தியசாலைகள் சமூகந்தோறும் தேவை. வைத்தியசாலைகள் நோயாளிகளைக் குணப்படுத்திச் சமூக சேவைக்குத் திருப்பி அனுப்பவேண்டும்.

யங்ஹஸ்பண்ட் என்பார் சமூகசேவை என்பது ஒரு பயிற்றப்பெற்ற பண்பாளர் நெறியாயமைதல் வேண்டும் என்ருர். தேசிய அடிப்படையில் சமூகசேவையாளர் தங்கள் விருப்பத்துக்கமைய உழைப்பதற்கு முன்வருதல் விரும்பத்தக்கது. தன் விருப்பச் சங்கங்களே, கட்டாய சங்கங்களிற் பார்க்கச் சேவைமனப்பான்மை உள்ளவை.

சுற்றுடல் பாதுகாப்புக்குச் சுகாதார நிலைமைக்கு எல்லோரும் ஒத்துழைத்தல் வேண்டும். சிங்கப்பூரில் வெற்றிலை வாயோடு நின்றவரை ஏற்றுவதற்கு ராக்சிக்காரர் சம்மதிக்கவில்லையாம். வெற்றிலை குதப்பியவர் தெருவில் பொழிச் என்று துப்பலாம் என்று ராக்சிக்காரர் கருதினர்.

## காந்தியடிகள் கட்டவிழ்த்த ஆட்டுக்கடா

பிகார் மாநிலத்தில் சாம்பரணில் ஒரு கிராமத்தில் உள்ள காளி கோயிலில் ஆட்டுக்கடாவைப் பலியிடுவதற்காகக் கட்டியிருந்தனர். அதனைக் காந்தியடிகள் கண்டார்.

எதற்காக ஆட்டைக் கட்டியுள்ளீர்கள்?
தேவிக்குப் பலியிடுவதற்காக.
ஆட்டைவிட மனிதன் உயர்ந்தவன்தானே?
ஆம். ஆம் பாபுஜி!
பின்னர் ஏன் ஒரு மனிதனைப் பலியிடலாகாது?
(மௌனம்)

''உங்களுக்குச் சம்மதமானல் என்னைப் பலியிடுங்கள். நான் ஆட்டைவிட உயர்ந்தவன்.'' என்று கூறிய மகாத்மா ஆட்டை அவிழ்த்து விட்டார். அன்றுடன் அங்கே பலியிடும் பழக்கம் நின்றுவிட்டது.

## எங்கள் நன்றி

மட்டக்களப்பில் எங்கள் சமயப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி சம்பந்தமான பிரசுரங்களை விநியோகித்து மக்களை நல்லதையே செய்யும் வண்ணம் தூண்டிவரும் இந்துசமயவிருத்திச் சங்கத்தாருக்கு எம் நன்றி. சைவம் இன்றேல் தமிழில்லை, தமிழின்றேல் சைவமில்லை என்னும் தங்கள் குறிக்கோள் வாசகம் எம் உள்ளத்தை வெகுவாகத் தொட்டுள்ளது.

★ பிறரிடம் குற்றம் காணுதல் வெறும் பேதமை ★

# பிரண்டை

நெடுந்தீவு எங்கும் கல்வேலிகளிலும், பனை மரங்களிலும் மற்றும் பூவரசு முதலிய மரங்களிலும் பற்றித் தாவிப் பரந்து படர்ந்து பசுமையாயிருக்கும் பிரண்டை பார்ப்பவர் கண்ணுக்குத் தேடுவாரற்ற தாவரமாயுள்ளது.

இறைவன் நெடுந்தீவை மூலிகைப் பூமியாக்கிய இரகசியத்தை நம்மவர் நன்கறியவில்லை. அங்குள்ள சித்தவைத்தியர் ஒருசிலர் பழைமை பேணுகிறார்கள். ஆனால் மூலிகைகளை நன்றாகப் பயன்படுத்துகிறார்கள் என்று நாம் சொல்வதற்கில்லை.

பிரண்டை என்றால் வச்சிரவல்லி. வல்லி எனவே அது கொடி என்பது விளங்குகிறது. வச்சிரம் என்று ஏன் பெயர் வந்தது? தெலுங்கர் நல்லேறு என்றும், மலையாளிகள் பேரண்ட என்றும், கன்னடத்தார் வச்சிரபாலி என்றும், வடக்கேயுள்ளவர்கள் ஹரசங்கர் என்றும், வடமொழியாளர் அஸ்திசம்ஹாரி என்றும் இதன் மகிமை நோக்கி வழங்குவர்.

பிரண்டைதானும் ஓலைப்பிரண்டை, உருண்டைப் பிரண்டை, முப்பிரண்டை, சதுரப்பிரண்டை, தீம் பிரண்டை, களிப்பிரண்டை, புளிப்பிரண்டை எனப் பல வகையாகவுள்ளது. முப்பிரண்டை கிடைப்பதரிது என்ப.

பிரண்டை உடல் தேற்றி, ருதுவுண்டாக்கி, பசி தூண்டி என்றெல்லாம் புகழ்பெற்றது. கபதோஷம், இரத்த பேதி, முதலியவற்றை நீக்கும்.

பிரண்டையைநெய் யால்வறுத்துப் பின்பரைத்து மாதே
வெருண்டிடா தேற்று விழுங்கில் - அரண்டுவரும்
மூலத் தினவடங்கும் மூலவி ரத்தமறும்
ஞாலத்தி னுள்ளே நவில்.

மாந்தம் வயிற்றுவலி வாயுஅதி சாரமுளை
சேர்ந்தமு லங்கபம்உட் செம்புனல்போக் கோய்ந்தநடை
யெல்லாம் அகலும் எழும்பும் அதிகபசி
மல்லார் பிரண்டையுண்டு வா.

திவசம் மாளயம் செய்யும் வேளையில் ஐயர் முல்லை, முசுட்டை, காரை, பிரண்டை முதலியவற்றைச் சொதியிலிடுமாறு ஆண்டுக்கொருநாள் எமக்குக் கூறுவதன் கருத்தை நன்றாக விளங்கிக்கொள்ளவேண்டும்.

---

## உங்களுக்குத் தெரியுமா? விடைகள்

1. அலஸ்கா 2. இருபத்தாறாயிரம் இனம் 3. திமிங்கிலம் 4. இத்தாலி 5. புளு 6. பாதுகாப்பான இடம் 7. பிறெஞ்ச் 8. கிராட்நகரம் 9. அராபிய 10. கடற்படைத் தலைவன் 11. பெருநீர்த்தேக்கம் 12. ஜீப் 13. நியூயோக் 14. பூமியின் கவர்ச்சி 15. துருவ நட்சத்திரம் 16. அல்ரி மீட்டர் 17. சறே 18. ரேபின் ரெனிஸ் 19. லாலையோ கொண்டா 20. வலன்ரினா திறெஸ் கோவா 21. ஏஞ்சல்ஸ், கால்மாக்ஸ் 22. மாரீஷல் பீளான் 23. ஸ்பானிஷ் 24. அஸ்வான் அணை 25. ஜாம்பசி நதி.

# Learn Your English

## Single word for a group

101. To keep one self from
102. Away from one's country
103. A gas that burns brightly
104. On the other side of
105. In a state of action
106. To regard with wonder
107. Cook by dry heat
108. Flag of a country
109. Round vessel for holding water
110. A large drinking cup
111. To gain something
112. A written statement confirmed by oath
113. One who begins to attack another
114. To give notice of danger
115. A conveyance for sick or wounded
116. To come to a place
117. Hair of the lower face
118. To cut or divide into equal parts
119. A large woolen sheet covering
120. A compound of copper and tin

101. abstain. 102. abroad 103. acetylene
104. across 105. active 106. admire 107. bake
108. banner 109. basin 110. beaker 111. acquire
112. affidavit 113. aggressor 114. alarm
115. ambulance 116. arrive 117. beard
118. bisect 119. blanket 120. bronze.

---

# யாழ்ப்பாணக்கோட்டை

இலங்கைக் கரைநாடுகளைக் கைப்பற்றி ஆண்ட போத்துக்கேயரும், ஒல்லாந்தரும் ஆங்காங்கே அழகிய கோட்டைகளைக் கட்டியுள்ளார்கள். போர்த்துக்கேயர் சைவத் திருக்கோயில்கள் பலவற்றைத் தரைமட்டமாக்கி, அத்திவாரத்தையும் கிழப்பி அழிவுசெய்து கோட்டைகளை அமைத்தார்கள். ஒல்லாந்தர் அவற்றைத் திருத்திக்கட்டினார்கள். ஆங்கிலேயர் அவற்றை ஓரளவுக்குப் பாதுகாத்தார்கள்.

இன்று கொழும்பு, திருக்கோணமலை, மட்டக்களப்பு, மன்னார், காலி, யாழ்ப்பாணம், பூநகரி, ஊர்காவற்றுறை முதலிய இடங்களிற் பழைய கோட்டைகள் உள்ளன. இக்கோட்டைகளுள் யாழ்ப்பாணக் கோட்டையே பெரிது. சிறந்தது.

---

# காரைநகரில் ஒருபணி

காரைநகரில் வேதரடைப்பு என்னும் பகுதியில் 11-7-83இல் கிராம முன்னேற்றச் சங்கத்தார் அமைத்த புதிய மண்டபத்தைப் பெரியவர்கள், அதிகாரிகள், பேராசிரியர்கள் மத்தியில் மில்க்வைற் தொழிலதிபர் மங்கலகரமாகத் திறந்துவைத்துத் தம் பிரசுரங்களை வழங்கி ஆசிர்வதித்துப் பேசினார். மரம் நட்டார்.

---

★ பெரியவர்கள் கெட்டதை நீக்கி நல்லதையே எடுப்பர் ★

முற்றொடர்:

## ஆங்கிலத்தில் அடுக்குமொழி

crude and primitive
cruel and rapacious
cultured and refined
customs and manners
dangers and pitfalls
dark and starless
dart and quiver
dates and details
deface and injure
desires and motives
detached and isolate
differences and disputes
dignified and austere
directed and controlled
discords and differences
distant and diverse
distress and humilation
docile and obedient
drill and discipline

## தமிழில் வழங்கும் ஒலிக்குறிப்புகள் சில

1. கட கட
2. கடுகடு
3. கணகண
4. கத கத
5. கம கம
6. கர கர
7. கல கல
8. கற கற
9. கிடு கிடு
10. கிணு கிணு
11. கிலு கிலு
12. கிளு கிளு
13. குலு குலு
14. குழ குழ
15. சட சட
16. சள சள
17. சிளு சிளு
18. சிறு சிறு
19. தக தக
20. திமி திமி
21. நற நற
22. நெரு நெரு
23. கொளு கொளு
24. நொறு நொறு
25. பக பக
26. பட பட
27. பள பள
28. பொசு பொசு
29. பொலு பொலு
30. மட மட
31. மள மள
32. முர முர
33. வழ வழ
34. விறு விறு
35. வெட்டு வெட்டு
36. வெடு வெடு
37. வெது வெது
38. வெல வெல
39. வெளு வெளு

## பனைகள் போதா

இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் உபகரிப்புத் திட்டத்தில் பணியாற்றும் சம்பந்தம் அவர்களை மில்க்வைற் தொழிலதிபர் அங்கும் இங்கும் கொண்டு திரிந்து பணிசெய்ய வாய்ப்பளித்ததன் பேறாகப் பல இடங்களில் பேரபிமானம் உண்டாகிப் பன்ன வேலைகள் ஆரம்பித்துள்ளன. அண்மையில் மண்டைதீவுப் பகுதிக்கு ஒரு பெரும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. ஏற்றுமதி செய்வதற்குப் பனம் பொருட்கள் பற்றாக்குறையாய் வரும் எனக் கருத வேண்டியிருக்கிறது.

## கொல்லங்கலட்டி

சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை மெய்வல்லுநர் இல்லப் போட்டியில் பரிசுபெற்றவர்க்கான பரிசுகளைச் சிறப்பு விருந்தினராக விஜயம் செய்த மில்க்வைற் தொழிலதிபர் கொடுத்து மகிழ்வித்தார்.

புத்தகப் புதினம்

## வாசிக்கும் பழக்கம்

புத்தகம் வாசிக்கப் பழகிவிட்டால் சும்மா இருக்க விடாது. புத்தகம் ஒன்றை விரித்தபடி இருக்கச் சொல்லும்: முடிவறியும் வேட்கையை உண்டாக்கும். புத்தகம் வாசிப்பதில் இன்று உலகப் புகழ்பெற்றவர்கள் அமெரிக்கர். அமெரிக்காவில் 1940 முதல் 1956 வரை 2000,000,000 இருநூறு கோடி நூல்கள் இறக்குமதி செய்தனர். உள்ளூரில் எத்தனை கோடி உருப்பெற்றனவோ தெரியாது. இத்தனை நூல்களையும் உளங்கொண்ட அமெரிக்கரின் வாசிக்கும் பழக்கம் உச்சம்.

அமெரிக்காவில் உருவாகும் மென்ரர் புத்தக வரிசை சாதாரணமாகப் பத்துப் பதிப்புக்குமேல் அச்சிடப்படுகின்றன. கையடக்கமாக மலிவுப் பதிப்பாக அவை கிடைக்கின்றன. கலை கலாசாரம் வரலாறு முதலிய பல துறைகளிலும் வெளிவரும் நூல்கள் 6000 வகையின, என்பர். இவற்றுள் சமயம் தத்துவம் சம்பந்தமாக 200 விதமான நூல்கள் 1958ஆம் ஆண்டில் வெளிவந்தன என்பர்.

## குளங்கள் தோண்டியவர்கள்

குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் குளந்தோண்டும் பணியில் ஊக்கங்கொண்டு வந்து ஆயுதங்கள் இரவல் வாங்கிப்போன அத்தனைபேர்களும் அவற்றைப் பழுதில்லாமல் திருப்பித் தந்தமைக்கு மில்க்வைற் தொழிலதிபர் நன்றி கூறுகின்றார்.

இதுவரை குளம் ஆழமாக்காதவர்கள் வாருங்கள்: ஆயுதங்கள் இரவல் தருவார். உங்கள் ஊர்க் குளங்களை ஆழமாக்கி அதிக மழைநீரைத் தேக்கி நிலத்தை வளஞ் செய்யுங்கள்.

## கொழும்புத்துறை

கொழும்புத்துறை மகாவித்தியாலயத்துத் தமிழ்த் தின விழாவில் பாண்டித்தியம் காட்டிய பிள்ளைகளுக்கான பரிசுகளை மில்க்வைற் தொழிலதிபர் உபகரித்துத் தாமே வழங்கிச் சிறப்பித்தார். அதிபர் மகாதேவன் அவர்கள் தொழிலதிபரின் பன்முகப்பணிகளைப் பாராட்டி நன்றி கூறினார்.

## இலுப்பை நடுவோம்

இலுப்பெண்ணெய் மருத்துவத்துக்கு உரியது. விளக்கெரிக்கவும் வீட்டுச் சமையலுக்கும் அது சிறந்தது. இலுப்பைப் பிண்ணாக்கு எண்ணெய் முழுக்குக்குத் தலைசிறந்தது. உதிரும் இலுப்பைப் பூ நல்ல உணவு.

மில்க்வைற் தொழிலகத்துக்கு ஏராளமான இலுப்பை விதைகள் தேவை. நல்ல விலை தருவோம் தாருங்கள்.

★ சுயநலம் முன்னுக்குநின்றால் சத்தியம் ஒதுங்கிவிடும் ★

## பஞ்சப்படி

அந்தக் காலத்திலே சமூகசேவை செய்த பெரியவர்கள் ஏழைகளுக்குக் காலத்துக்குக் காலம் பலவிதமாக உதவி செய்து வந்தார்கள்; அவை பொங்கற்படி, வருடப்படி, தீபாவளிப்படி என்றெல்லாம் வழங்கியது.

அண்மையில் 1951ஆம் ஆண்டில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்குச் சம்பளத்தோடு ஒரு பஞ்சப்படியும் சேர்த்து வழங்கப்பெற்றது. அந்தப்படி எல்லோருக்கும் கிடைக்கவில்லை. உதாரணமாக வயலுழுதவர்களுக்குக் கிடைக்கவில்லை. இதைக்கண்ட பண்டிதமணி உருக்கமான வெண்பா ஒன்றை நகைச்சுவையோடு பாடியுள்ளார். (5-1-51)

பஞ்சப்படி யெல்லாம்
பட்டணத்துக் காரர்க்காம்
கஞ்சி குடிப்பார்க் கில்லையாம்
காப்பிக்காம் — நெஞ்சேகேள்
ஏருழுவார்க் கிங்கே
இடமில்லை ஏ. பி. சி.
காரருக்கே காலமிது காண்.

முற்றொடர்:

## தொகையகராதி

### நான்கு

சமயத்துறை

| | |
|---|---|
| சரியை | யோகம் |
| கிரியை | ஞானம் |

தேவ கணிகையர்

| | |
|---|---|
| மேனகை | ஊர்வசி |
| அரம்பை | திலோத்தமை |

தேவர்கள்

| | |
|---|---|
| பவனர் | சோதிடர் |
| வியந்தரர் | கற்பவாசிகள் |

தேற்றம்

| | |
|---|---|
| கருப்பை | நிலம் |
| முட்டை | வியர்வை |

நங்கைச் செடிகள்

| | |
|---|---|
| சிறியாள் நங்கை | வன நங்கை |
| பெரியாள் நங்கை | வேப்பிலை நங்கை |

நிர்வாண திட்சை

| | |
|---|---|
| சத்தியோ | லோகதர்மிணி |
| அசத்தியோ | சிவதர்மிணி |

நிலம்

| | |
|---|---|
| குறிஞ்சி | மருதம் |
| முல்லை | நெய்தல் |

## Some Great Sayings

1. There is no austerity like forgiveness
2. If you believe it is a deity, otherwise a stone
3. Benevolence has ruined none in the world
4. That which is left belongs to charity
5. Nothing will be deminished by charity
6. Charity is a plant whose roots are evergreen
7. The dead is the pilot of the living
8. Deviation from right is deviation from peace
9. Earth laughs at him who calls a place his own
10. Where faith is there God is
11. Give in this world, to get back in the next
12. What you have given will be a shield
13. He who knows himself will know God
14. God builds the nest of the blind bird
15. We give to God buy grains and take by bushels.
16. God came to give, but we had no lap in which to receive.
17. God dwells in music.
18. Even God for gives three sins.
19. God is the help of the helpless.
20. God loves good accounts.
21. By knowing god one is released from all fetters
22. We have not seen God, reasons recognises him
23. God who has soaked you will dry you again

அமோக ஆதரவு
அபிமானிகளுக்கு நன்றி

மில்க்வைற் தொழிலகத்தின்
ஐம்பத்தாறும் ஆண்டனுபவத்தில் உருவான
புதிய தயாரிப்பு




சுப்ப மில்க்வைற் சோப்

சுப்ப மில்க்வைற் சோப்புக்கு நாட்டின்
நான்கு திசைகளிலும் நல்லாதரவு
கிடைத்து வருகிறது என்பதை
நன்றியுணர்வோடு
தெரிவித்துக்கொள்கிறோம்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-8-83.